# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## நான்காம் வருட / முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு
2015/2016 (மார்ச் 2019)

## TLS 4123 தென்னாசிய இலக்கியம்

பகுதி – I இல் இருந்து இரு வினாக்களையும் பகுதி – II இல் இருந்து மூன்று வினாக்களையும் தேர்வு செய்து மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக

---

### பகுதி I

1. (அ) தெலுங்கு இலக்கிய வரலாற்றில் 'புராணகால' இலக்கிய முயற்சிகள் குறித்து கருத்துரைக்குக. (08 புள்ளிகள்)

   (ஆ) பதினாறாம் நூற்றாண்டு தொடக்கம் தற்காலம் வரையான காலப்பகுதியில் தெலுங்கில் தோன்றிய இலக்கியங்களது போக்குகளை மதிப்பீடு செய்க. (12 புள்ளிகள்)

2. (அ) இருபதாம் நூற்றாண்டு வங்க இலக்கியத்தின் பிரதான போக்குகளை அடையாளம் காண்க. (10 புள்ளிகள்)

   (ஆ) வங்காளக் கவிதை வளர்ச்சியில் ரவீந்திரநாத் தாகூர் பெறும் இடம் யாது? (10 புள்ளிகள்)

3. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டு** பற்றி விளக்குக.

   (அ) சிங்கள மத்தியகால இலக்கியங்களின் போக்குகள்

   (ஆ) 'உலகப் புகழ்பெற்ற மூக்கு' சிறுகதையின் உருவச் சிறப்பு

   (இ) மலையாளக் கவிதை 'மும்மூர்த்தி'களின் கவிதைகள் (10x2=20 புள்ளிகள்)

### பகுதி II

4. தென்னாசியப் பிராந்தியத்தில் பொதுமையானதொரு இலக்கிய மரபு தோன்றுவதற்குக் காரணமான பின்னணிகளை அடையாளம் காண்க. (20 புள்ளிகள்)

5. "தென்னாசியாவிலுள்ள பல்வேறு பிரதேசங்களிலும் தனித்துவமான இராமாயண இலக்கிய வடிவங்கள் உருவாகியுள்ளன" ஆராய்க. (20 புள்ளிகள்)

6. 'இந்தோ – ஆங்கில இலக்கியம்' (Indo – Anglian Literature) என்றால் என்ன என்பதைச் சுருக்கமாக எடுத்துக்கூறி, அவ்விலக்கியங்களின் பிரதான பண்புகள் பற்றி விபரிக்குக. (20 புள்ளிகள்)

7. மலையாள நாவல்களின் உருவ, உள்ளடக்கச் சிறப்புகள் குறித்து மதிப்பீடு செய்க. (20 புள்ளிகள்)